# அரையாண்டுத் தேர்வு - 2024

வகுப்பு : **12** | **தாவரவியல்** | பதிவு எண் :

காலம் : 3.00 மணி | | மொத்த மதிப்பெண்கள் : 70

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15 x 1=15**

**கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1. தொடர்விளிம்பற்ற கருவூண் திசு காணப்படுவது.
அ) கோக்கஸ் ஆ) அரிக்கா இ) வாலிஸ்நேரியா ஈ) அராக்கிஸ்

2. கம்பைலோட்ராபஸ் சூல் இதில் காணப்படுகிறது.
அ) காக்டேசி ஆ) லெகுமினோசே இ) அலிஸ்மட்டேஸி ஈ) பிரைமுலேசி.

3. "கேமீட்டுகள் எப்பொழுதும் கலப்புயிர்களாக இருப்பதில்லை" என்னும் கூற்று
அ) ஓங்கு விதி ஆ) சார்பின்றி ஒதுங்குதல் விதி
இ) தனித்துப்பிரிதல் விதி ஈ) இயைபிலாக் கருவுறுதல் விதி

4. இனிப்புப் பட்டாணித் தாவரத்தில் காணப்படும் பிணைப்புத் தொகுதிகளின் எண்ணிக்கை.
அ) 2 ஆ) 4 இ) 7 ஈ) 10

5. கூற்று : மரபணு பொறியியலில் அக்ரோபாக்டீரியம் பிரபலமானது. ஏனெனில் இந்த பாக்டீரியம் அனைத்து தானியங்கள் மற்றும் பயிறு வகைத் தாவரங்களின் வேர் முடிச்சுகளில் ஒருங்கிணைந்துள்ளது.
காரணம் : பாக்டீரிய குரோமோசோமின் மரபணு தொகையத்தில் இணைக்கப்பட்ட ஒரு மரபணு அந்த பாக்டீரியம் இணைந்துள்ள தாவரத்திற்கு தானாக மாற்றப்படுகிறது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கம்.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றிற்கு சரியான விளக்கம் அல்ல
இ) கூற்று சரி. ஆனால் காரணம் தவறானது.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

6. குழந்தைகளில் நிலவும் குருட்டுத்தன்மையை கட்டுப்படுத்துவது எது?
அ) பொன்நிற அரிசி ஆ) Bt கத்தரிக்காய்
இ) ஃபிளேவர் சேவர் தக்காளி ஈ) எதுவுமில்லை

7. பெருமளவில் உயிரி நேர்மை இழப்பைத் தடுப்பது.
அ) உயிரி காப்புரிமம் ஆ) உயிரி அறநெறி
இ) உயிரி பாதுகாப்பு ஈ) உயிரி எரிபொருள்

8. கீழ்க்கண்ட எந்த மண்ணின் நீர் தாவரங்களுக்குப் பயன்படுகிறது.
அ) புவியீர்ப்பு நீர் ஆ) வேதியியல் பிணைப்பு நீர் இ) நுண்புழை நீர் ஈ) ஈரப்பத நீர்

9. உலக சுற்றுச்சூழல் தினம் எது?
அ) ஏப்ரல் 22 ஆ) மே 22 இ) ஜீன் 05 ஈ) ஜீலை 07

10. கீழ்க்கண்டவைகளில் எது சூழ்மண்டல சேவைகளில் ஒழுங்குப்படுத்தும் சேவையல்ல
i) மரபணு வளங்கள் ii) பொழுதுபோக்கு மற்றும் அழகுசார் மதிப்புகள்
iii) ஊடுருவல் எதிர்ப்பு iv) காலநிலை கட்டுப்பாடு
அ) i மற்றும் iii ஆ) ii மற்றும் iv இ) i மற்றும் ii ஈ) i மற்றும் iv

11. கீழ்க்கண்டவற்றுள் எது இடவரைத் தாவரம்?
அ) பைப்பர் பார்பெரி ஆ) இலியோகார்பஸ் வெனுஸ்டஸ்
இ) பெண்டிக்கியா கொண்டப்பனா ஈ) டெக்கோமா ஸ்டென்ஸ்

M.Poovarasan M.Sc B.Ed
Pg Asst in chemistry
Dharmapuri district

12. காடுகள் அழிக்கப்படுதல் என்பது
அ) காடுகளற்ற பகுதிகளில் வளரும் தாவரங்கள் மற்றும் மரங்கள்
ஆ) காடுகள் அழிந்த பகுதிகளில் வளரும் தாவரங்கள் மற்றும் மரங்கள்
இ) குளங்களில் வளரும் தாவரங்கள் மற்றும் மரங்கள்
ஈ) தாவரங்கள் மற்றும் மரங்கள் ஆகியவற்றை அகற்றுதல்

13. கீழ்க்கண்டவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடு.

| | | | |
|---|---|---|---|
| I. | காராமணி | - | i. ஹிம்கிரி |
| II. | கோதுமை | - | ii. பூசாகோமல் |
| III. | மிளகாய் | - | iii. பூசாசடபஹர் |
| IV. | பிராசிகா | - | iv. பூசாசுவர்னிம் |

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| அ) | iv | iii | ii | i |
| ஆ) | ii | i | iii | iv |
| இ) | ii | iv | i | iii |
| ஈ) | i | iii | iv | ii |

14. கீழ்க்கண்டவற்றுள் எது புறவேர் பூஞ்சை?
அ) சூடோமோனாஸ் ஆ) அமானிடா இ) பேசில்லஸ் ஈ) குலோமஸ்

15. கீழ்க்கண்டவற்றில் பயிர்த்தாவரங்களில் தூண்டப்பட்ட சடுதி மாற்றத்தை தோற்றுவிக்க பொதுவாக பயன்படும் காரணி எது?
அ) ஆல்ஃபா கதிர் ஆ) X – கதிர் இ) UV கதிர் ஈ) காமா கதிர்

## II. ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் 24 கட்டாயம்) 6 x 2 = 12

16. கான்தரோஃபில்லி என்றால் என்ன?
17. மரபணுக்குள்ளே நிகழும் இடைச்செயல் என்றால் என்ன?
18. TATA பேழை என்றால் என்ன?
19. ட்ரோபோபைட்டுகள் என்றால் என்ன?
20. நன்னீர் சதுப்புநிலக் காடுகளில் காணப்படும் தாவரங்கள் இரண்டினைக் கூறு
21. காடழிப்பிற்கான காரணங்கள் இரண்டினைக் கூறு.
22. கலப்பின வீரியம் - குறிப்பு வரைக.
23. நறுமணப் பொருட்களின் அரசன் மற்றும் நறுமணப்பொருட்களின் அரசி என அழைக்கப்படும் தாவரங்களின் தாவரவியல் பெயர்களை எழுதுக.
24. நுண்ணுயிர் நீக்கம் பற்றி நீவிர் அறிவது என்ன?

## III. ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும் (வினா எண் 33 கட்டாயம்) 6 x 3 = 18

25. கருவூண் திசுவின் பணிகள் யாவை?
26. முழுமைபெறா ஓங்கு தன்மை மற்றும் இணை ஓங்குதன்மை வேறுபடுத்து.
27. மெய்யில்லா மடியத்தின் வகைகளைப் படம் வரைக.
28. Bt பருத்தியின் நன்மைகள் யாவை?
29. இரண்டாம்நிலை வளர்சிதை மாற்றப்பொருட்கள் இரண்டினைக் கூறு. அவற்றின் தாவர மூலங்கள் மற்றும் பயன் ஆகியவற்றைக் கூறு.
30. ஆழ்கடல் மண்டலத்தின் உற்பத்தி திறன் குறைவாக இருக்கும். ஏன்?
31. கார்பன் கவரப்படுதல் மற்றும் சேகரித்தல் என்றால் என்ன?
32. ஒருவர் தினமும் ஒரு கோப்பை காஃபி அருந்துவது அவருடைய ஆரோக்கியத்திற்கு உதவும். இது சரியா? சரியென்றால் நன்மைகளை வரிசைப்படுத்து.
33. வெப்பநிலை அடிப்படையில் ராங்கியர் எவ்வாறு உலகத் தாவரக் கூட்டங்களை வகைப்படுத்தியுள்ளார்?

## IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 x 5 = 25

34. கருவுறாக்கனி பற்றி விரிவான தொகுப்பு தருக. அதன் முக்கியத்துவம் பற்றி குறிப்பு சேர்க்க.
**(அல்லது)**
பசுங்கணிக மரபணு சார்ந்த பாரம்பரியத்தை எடுத்துக்காட்டுடன் வெளிக் கொணர்க.

35. குறுக்கேற்ற செயல்முறையை விளக்குக.
**(அல்லது)**
உயிரிதொழில்நுட்பவியலின் பயன்பாட்டைக் குறிப்பிடுக.

36. நீர்த் தாவரங்களின் வகைகளை அதன் எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்கவும்.
**(அல்லது)**
கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு ஒரு பிரமிட் வரைந்து சுருக்கமாக விளக்குக.
பருந்து – 50, தாவரங்கள் - 1000, முயல் மற்றும் எலி – 250+250,
பாம்பு மற்றும் ஓணான் - 100+50.

37. பன்ம பாதுகாப்பில் கோவில் காடுகள் எவ்வாறு உதவி புரிகின்றன?
**(அல்லது)**
பயிர் பெருக்கத்தின் குறிக்கோள்கள் யாவை?

38. அரிசியின் பொருளாதார முக்கியத்துவத்தைத் தருக.
**(அல்லது)**
தாவரத்திசு வளர்ப்பின் பயன்பாடுகள் யாவை?